REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஐப்பசி 17உ வியாழன் (3—11—55) ★ ★ வெளியீடு: ஐப்பசி 18உ வெள்ளி (4—11—55) [இதழ் 121

கடன் வாங்குவதும் கொடுப்பதும்!

இந்திய நிதி மந்திரி கருத்து

புதுடில்லி, நவ. 2—

"எவரும் கடன் வாங்க வேண்டாத அளவு பணக்காரர்களல்ல; அதேபோல, கடன் தரக்கூடாத அளவு ஏழைகளுமல்ல,"

—என்று, நிதி மந்திரி தேஷ்முக், பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

"தனது, முதல் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கே,

(4-ம் பக்கம் பார்க்க)

தாய்மொழிப் பற்றுப்பெற மாற்றார் தூண்டுதலை நோக்கும் காமராசர்

'தமிழ் நாடு' என்று பெயரிடக் கோர காலம் கனியவில்லையாம்!

பாகிஸ்தான் பிரிந்த பின்னும் 'இந்தியா' என்றே இருக்கிறதாம்!

முதன் மந்திரியின் கூற்று

சென்னை, நவ. 2—

"இதர மொழிப் பகுதிகள் நீங்கிய தமிழ்ப் பகுதிகள் அடங்கிய சென்னை மாநிலத்திற்கு, 'தமிழ் நாடு' என்று மொழி வழிப் பெயர் அமைக்கவேண்டும்; கேரளம், கர்நாடகம், ஆந்திரம், என்று பல மாநிலங்களுக்கு மொழி வழிப் பெயர் தந்த மாநிலப் புது அமைப்புக் குழுவினர், தமிழ்ப் பகுதிகளுக்கு மட்டும் 'சென்னை மாநிலம்' என்ற பெயரே என் நீடிக்கவேண்டும் என்று கருதுகின்றனர்? குழுவின் திட்டம் அமுல் செய்யப்படும்போது, மலையாள, கன்னடப் பகுதிகள் நீங்கிய சென்னை மாநிலத்திற்கு 'தமிழகம்' அல்லது 'தமிழ் நாடு' என்றே பெயரிட வேண்டும்—என்று, தமிழகத்தில் உள்ள பல கட்சியினரும் கோரியிருக்கின்றனர்.

ஆனால், இந்தக் கோரிக்கை குறித்து ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தியதாகவே தெரியவில்லை என்பதை, டில்லி முதன் மந்திரிகள் மாநாட்டில் சென்னை மந்திரிகள் கலந்துகொண்டு திரும்பியதுமே, நாம் இங்கு தெரிவித்திருந்தோம்.

இப்போது முதன் மந்திரி காமராசர், "சென்னைக்கு 'தமிழ் நாடு' என்று பெயர் வைக்கவேண்டும் என்று கோருவதற்குக் காலம் கனியவில்லை" என்று கூறியிருக்கிறார்.

இப்படிக் கூறிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"பாகிஸ்தான் பிரிந்த உடன், பாகிஸ்தானியர்கள், எஞ்சிய இந்தியாவை 'இந்தியா' என்று அழைக்கக் கூடாதெனவும் 'பாரத்' என்றே அழைக்க வேண்டும் என்றும் கூறினர்; இந்தியாவிலிருந்த சில தீவிரவாதிகளும் 'பாரதம்' அல்லது 'இந்துஸ்தானம்' என்றே இந்தியாவை அழைக்க விரும்பினர்; என்றாலும், கடந்த காலச் சரித்திரத் தொடர்பை எண்ணி, 'இந்தியா' என்ற பெயரே நிலைத்தது. அதேபோலத்தான், நாம் இன்று 'சென்னை' என்றே நமது மாநிலத்தின் பெயரை நீடிப்பதற்குச் சில காரணங்களுண்டு.

"மாநிலத்திலிருந்து வெளியேறுகிற ஆந்திரர்களோ, அல்லது மலையாளிகளோ, 'சென்னை' என்று பெயர் இருக்கக்கூடாது—என்று ஆட்சேபித்து, 'தமிழ் நாடு' என்று பெயர் வைத்துக் கொள்ளுங்கள்—என்று கூறினால், அதில் பொருள் உண்டு. இங்கிருப்பவர்கள் தானே பெயரை மாற்றக் கோருகிறார்கள்? எப்படியிருப்பினும், 'தமிழ் நாடு' என்று பெயர் வைக்குமாறு கோருவது மிகவும் அவசரப்பட்ட செயலாகும்; அதற்கு இன்னும் காலம் கனியவில்லை."

★

'தமிழ் நாடு' என்ற பெயரை காங்கிரஸ் விரும்பவில்லை?

"தேவிகுளம், பீர்மேடு வட்டங்கள் சென்னையுடன் இணைய வேண்டும்; சென்னைக்கு 'தமிழ் நாடு' அல்லது 'திராவிட நாடு' என்று பெயர் வைக்க வேண்டும்—என்ற தமிழர்களின் கோரிக்கை குறித்து, நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?"

என்று, அகில இந்திய காங்கிரஸ் தலைவர் தேபரை, சென்னை விமான நிலையத்தில் நிருபர் ஒருவர் இரண்டு நாட்களுக்கு முன்பு கேட்டபோது, அவர், 'இந்தக் கோரிக்கை குறித்து, பத்திரிகைகளில் வந்த செய்திதான் எனக்குத் தெரியுமே தவிர, காங்கிரஸ் கட்சியிடமிருந்து அதிகாரபூர்வமாக எதுவும் எனக்குத் தெரிவிக்கப்படவில்லை' என்று பதில் தந்திருக்கிறார்.

இவரது பதிலிலிருந்தும், இந்த மாநில ஆட்சியாளர்களோ, தமிழ் நாடு காங்கிரசாரோ, 'தமிழ் நாடு' என்று சென்னைக்குப் பெயரிட விரும்பவில்லை என்றே தெரியவருகிறது.

மாநிலக் குழுத் திட்டம்

சென்னை சட்ட சபை விவாதம்

சென்னை, நவ. 2—

வரும் நவ. 21-ந் தேதியன்று, சென்னை சட்ட சபை கூடும் என்றும், அப்போது மாநிலக் குழுவின் திட்டம் குறித்து விவாதிக்கப்படும் என்றும் முதன் மந்திரி காமராசர், மந்திரி சபைக் கூட்டம் ஒன்றிற்குப் பிறகு தெரிவித்திருக்கிறார்.

சட்ட சபை விவாதிக்கும் முன்பு மந்திரி சபை, திட்டம் குறித்து விவாதிக்கும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

முடிந்துவிட்ட கதை!

லண்டன், நவ. 2—

"நான் இளவரசிமார்கரெட்டுடன் கொண்டிருந்த காதல் குறித்து, ஒருபோதும் எவரிடத்திலும் மனம்விட்டுப் பேச முடியாது," என்று, பீட்டர் டவுன்செண்ட் தெரிவித்திருக்கிறாராம்.

'ஈவினிங் ஸ்டாண்டர்ட்' என்ற இதழின் நிருபரிடத்தில், "நான் இளவரசி மார்கரெட்டை மீண்டும் சந்திக்கமாட்டேன்; இளவரசியுடன் நான் கொண்டிருந்த உறவு குறித்து எப்போதும், எங்கும் விவாதிக்கமாட்டேன்; அது ஒரு முடிந்துவிட்ட கதை" என்று, அவர் தெரிவித்ததாகச் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

டவுன்செண்ட் உத்தியோக உயர்வு தரப்படலாம் என்ற ஒரு செய்தியும் அடிபடுகிறது.

'ஏமாற்றமாயிருக்கிறது'

'எஞ்சிய பகுதிகளும் சென்னையுடன் இணைய வேண்டும்'

தமிழ் நாடு காங்கிரஸ் தீர்மானம் குறித்து குஞ்சன் (நாடார்) அதிருப்தி

சென்னை, நவ. 2—

"தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியினர், தேவிகுளம், பீர்மேடு ஆகிய இரு தாலுகாக்களை மட்டும் தமிழ் நாட்டுடன் இணைக்க வேண்டும்—எனக் கோரியிருக்கின்றனரே தவிர, எஞ்சிய நெய்யாற்றங்கரை, சித்தூர் பகுதிகள் குறித்துக் கவலைப்பட்டதாகக் காணோம்; இது வருந்தத் தக்கது—ஏமாற்றத்தைத் தருவது!

"அந்த இரு தாலுகாக்களும் சென்னையுடன் இணைந்தால்தான், அங்கு வாழும் தமிழர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட முடியும் என்ற நிலையை, சென்னை ஆட்சியாளருக்கு உணர்த்த நான் உத்தேசித்திருக்கிறேன்,"

என்று, தமிழ் நாடு காங்கிரஸ் தீர்மானம் குறித்து, அதிருப்தி தெரிவித்து, திரு-தமிழக காங்கிரஸ் தலைவரான குஞ்சன் (நாடார்) எம். எல். ஏ, அவர்கள் கருத்தறிவித்திருக்கிறார்.

ஐக்கிய கர்நாடக அமைப்பு

உடன் பிறந்த இரு மந்திரிகளிடை கருத்து உடன்பாடில்லை!

ஐதராபாத், நவ. 2—

மாநிலக் குழுவின் திட்டம் குறித்து சோதரர்களான இரு மந்திரிகளிடையே கருத்து வேறுபாடு இருப்பதாகத் தெரிய வருகிறது.

ஐதராபாத் மாநில பொது மராமத்து, தொழிலாளர் நல இலாகாக்களின் மந்திரியான டாக்டர் ஜி. எஸ். மெல்கோதே, ஐக்கிய கர்நாடகம் அமைவதை வரவேற்கிறார்.

ஆனால், அவரின் சகோதரரான ஏ. ஜி இராமச்சந்திரராவ் என்ற மைசூர் மாநில கல்வி இலாகா மந்திரி, ஐக்கிய கர்நாடகம் கூடாது! என்றும், மைசூர் தனி மாநிலமாக இருக்கவேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

'விசால ஆந்திரம்' அமைப்பு

ஆந்திர காங்கிரசார் எதிர்ப்பு

விஜயவாடா, நவ. 2—

"மாநிலக்குழுவினர் சிபாரிசு செய்துள்ளபடி, 'விசால ஆந்திரம்' அமைவதை ஆறு ஆண்டுகளுக்கு ஒத்திப்போடுவது, காங்கிரஸ் நிறுவனத்திற்கு ஊறுதேடும் என்பதோடல்லாது, நெருக்கடியையும், சிக்கலையும் வளர்க்கும் என்பதால் விரும்பத்தக்கதல்ல; எனவே, 'விசால ஆந்திரம்' உடனடியாக அமைய வேண்டும்,"

என்று, ஆந்திர பிரதேச காங்கிரசார், ஐக்கிய சட்டசபைக் காங்கிரஸ் உறுப்பினர்கள், ஆந்திர காங்கிரஸ் மக்கள் சபை உறுப்பினர்கள் ஆகியோரடங்கிய கூட்டம் ஒன்றில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் சைக்கிள் உற்பத்தி 1955-ம் ஆண்டின் முதல் கால் வருடத்தில் 98,600 ஆக இருந்தது—இரண்டாவது கால் வருடத்தில் 1,23,200 ஆக உயர்ந்துவிட்டது.

மண்ணெண்ணை மூலம் மின்சாரமாம்!

ரஷ்யாவின் சாதனை

ஒரு மண்ணெண்ணெய் விளக்கின் வெப்பத்தின் மூலம் மின்சாரத்தை உண்டாக்கி, அதன்மூலம் ஒரு வானொலியை இயக்க வைக்கவும் இயலும் என்பது, புதுடில்லியில் நடைபெறும் இந்தியப் பொருட்காட்சி சாலையிலுள்ள ரஷ்யப் பிரிவுப் பகுதியில் நிரூபிக்கப்பட்டுள்ளதாம்.

"இந்த மின்சாரத்தை இதர சிறு வேலைகளுக்கும் உபயோகிக்கலாம்; மின்சார வசதியில்லாத இந்தியக் கிராமங்களில் இந்த முறையைப் பயன்படுத்தலாம்," என்று, கண்காட்சிப் பகுதியின் ரஷ்யப் பிரதிநிதி குறிப்பிட்டுள்ளார்.

★

த. நா. காங்கிரஸ் செயற் குழு தீர்மானம்

தமிழ் நாடு காங்கிரஸ் செயற்குழுவினர், 'கேரளத்துடன் இருக்கவேண்டும் என்று மாநிலக் குழுவினர் சிபாரிசு செய்துள்ள தமிழ் தாலுகாக்கள் நான்கில் இரண்டான தேவிகுளம், பீர்மேடு ஆகியவை சென்னையுடன் இணைய வேண்டும்' என்று, இன்று நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருக்கின்றனர்.

'ஒப்புக்கொள்ளப்பட்ட தமிழ்ப் பகுதிகளை கேரளத்துடன் இணைக்க வேண்டும் — என்று குழுவினர் தீர்ப்பளித்திருப்பது, தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்; எனவே, அந்த இரு தமிழ் வட்டங்களும், சென்னையுடன் இணைக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்துகிறோம்,' என்று, அந்தத் தீர்மானம் கூறுகிறது.

பெங்களூரில் வானொலி நிலையம் ஆரம்பம்

இந்தியாவின் 6 பெரிய மத்திய அலை ஒலிபரப்பு நிலையங்களில் ஒன்றானதும், 50 கிலோவாட் சக்தியுடன் பெங்களூரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளதுமான வானொலி நிலையம் இன்று மாலை 5 மணிக்கு ஒலிபரப்பு தொடங்கியது.

'புல்லுருவிகள்; சமூக விரோதிகள்!'

சாதுக்களைப்பற்றி பிரதமர் நேரு

"இந்தியாவில் உள்ள சுமார் 55 இலட்சம் சாதுக்களில் சுமார் 10 முதல் 15 ஆயிரம் பேர் வரைதான் உண்மையான சன்னியாசிகள் இருப்பர்; இதர பெரும்பாலோர் எல்லாம் புல்லுருவிகள்—சமூக விரோதிகள்,"

என்று, பிரதமர் பண்டித நேரு சௌராஷ்டிர பாரத் சேவக் சமாஜ கூட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"ஒரு நல்ல சமுதாயத்தில், மக்கள் தங்களின் சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்வதோடு மட்டுமில்லாமல் மக்களின் பொது நலனுக்கும் ஏதேனும் உதவுபவர்களாக இருக்கவேண்டும்," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

Best copy available

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 3—11—'55 வியாழன்

ஆதிக்கப் போட்டி!

'கொடிய விளைவுகளை உள்ளடக்கிய கோரப் போர்ச் சூழ்நிலைகள் மறைந்து, அமைதியும் - மகிழ்ச்சியும் தவழும் வாழ்வு உலகத்தவருக்குக் கிடைக்க சமாதானம் நிலைநிறுத்தப்பட வேண்டும்' என்று பேசாதவர்கள் இல்லை.

சமாதான நிலைநிறுத்தத்திற்காகப் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் பலர் தெரிவிக்கின்றனர்.

'உலக சமாதானத்திற்கு ஊறு ஏற்படாமலும், மீண்டும் போர்கள் மூண்டுவிடாமலும் பார்த்துக்கொள்வதையே முக்கிய இலட்சியமாகக் கொண்டது ஐக்கிய நாடுகள் நிறுவனம்' என்று வர்ணிக்கிறார்கள்.

'ஜினீவா'க்கள் நடைபெறுகின்றன; நல்லெண்ணம் பரிமாறிக் கொள்ளப்பட்டன; ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும் வாய்ப்புக்கள் கிடைத்தன; சமாதானத்திற்கான திட்டங்கள் தாக்கல் செய்யப்பட்டன—என்ற செய்திகள் வராமலில்லை!

சமாதானத் தூதுவர்கள் பல நாடுகளிலும் சுற்றுப்பயணம் செய்கின்றனர்; அங்கெல்லாம், மக்களும்-சர்க்காரும் சமாதானம் நிலைநாட்டப்படுவதில் மிகுந்த அக்கரையும், [illegible] ஆர்வமும் கொண்டுள்ளனர்.

வெண்புறா சமாதானத்தின் அறிகுறி. கவிஞர்கள் இயற்றும் பாடல்கள், புறாக்களைப் பற்றித்தான்! ஓவியர்கள் தீட்டும் எழில்மிகு சித்திரங்களும் அவற்றைப் பற்றியே!

இப்படியெல்லாம்கூட கூட்டியும் - குறைத்தும் செய்திகள் கிடைக்கின்றன.

என்றாலும், இவை எல்லாம், மக்களுடைய உள்ளத்திலே நம்பிக்கையை மலரச் செய்யப் போதுமான வலிமை பெற்றவையாயிருக்கவில்லை — என்பதை, சமாதானத்தை நிலைநிறுத்துவதையே தங்கள் தங்கள் குறிக்கோளாகக் கொண்டிருப்பதாகக் கூறும் பெரும் வல்லரசுகளிடையே நீடித்து இருந்துவரும் ஆதிக்கப் போட்டி நன்கு உணர்த்துகிறதென்றே கூறவேண்டியுள்ளது!

மேற்கு வல்லரசுகள், நீண்டகாலமாகத் தங்களுக்கு உலக அரங்கில் கிடைத்துள்ள செல்வாக்கையும், ஆதிக்கத்தையும் நிலைநாட்டுவதில் மும்முரமாக முனைந்து நிற்கின்றன. இதற்காக, அவர்கள் தங்களுக்குள்ளேயே இயற்கையாக முளைத்து, கிளைத்து வருகின்ற முரண்பாடுகளைக்கூட சில பல நேரங்களில் மறந்துவிட பெருமுயற்சி எடுத்துக்கொள்கின்றன.

மேற்கு வல்லரசுகளுக்கு இணையானது என்று கூறிக்கொள்ளாவிடினும், 'இருக்கிற செல்வாக்கு வளரும் தன்மையது' என்ற எண்ணமேலீட்டால், உலக அரங்கில் தனது செல்வாக்கை வளர்த்துக்கொள்ளுவதற்காக ரஷ்யா மேற்கொள்ளும் முயற்சிகளும் உலகறிந்ததுதான்.

இந்த வகையில் உலக வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டிக்கு, உலகின் பல பகுதிகளும் நிலைக்களனாய் இருந்து வருகின்றன.

தூரக் கிழக்கிலும், மேற்கிலும் இன்று சூழ்நிலைகள், மகிழ்ச்சி தரத்தக்கனவாயில்லாவிடினும், 'ஆபத்து குறைவானவையாயுள்ளன' என்று கூறப்படுகிற நேரத்திலேயே, மத்திய கிழக்குப் பகுதிகள் இன்று சிக்கல்களின் தோற்றுவாயாக ஆக்கப்பட்டிருப்பது வருந்தற்குரியதாகும்.

நீண்டகாலமாகவே நல்லுறவும், நேசமுமின்றி இருந்துவரும் யூதர்கள் வாழும் இஸ்ரேலுக்கும், இஸ்லாமியர்கள் வாழும் அரேபிய நாடுகளுக்கும் தோன்றியுள்ள மனக்கசப்பு வளருவதற்கு, வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டிதான் காரணம்—என்று நடுநிலையாளர்கள் கருதுகின்றனர்.

மத்திய கிழக்கு, தங்களது ஆதிக்கத்திற்கும், செல்வாக்கிற்கும் மட்டுமே உரிய இடம்—என்று, மேற்கு வல்லரசுகள் எண்ணுகின்றன. இந்த எண்ணமே, 'அங்கு அவர்களுக்குக் கிடைத்திருப்பதைப் போன்ற செல்வாக்கும், ஆதிக்கமும் நமக்கும் வேண்டும்' என்று எண்ணுமாறு ரஷ்யாவைத் தூண்டுவதாக இருக்கிறது என்றால், அது மிகையாகாது.

இஸ்ரேல்—எகிப்து எல்லையோரத்தில் அடிக்கடி தாக்குதல்கள், கலவரங்கள் நடைபெறுகின்றன; இதனால், இஸ்ரேல், தனது பாதுகாப்பிற்கு என்று தனது ஆயுத பலத்தைப் பெருக்கிக்கொள்ளவும், எகிப்தும் அதனைப் பின்பற்றவுமான கட்டம் வந்தபோது, இஸ்ரேல்—மேற்கு நாடுகளிடமும், எகிப்து—ரஷ்யாவிடமும் அல்லது அதன் மூலமாக வேறு ஒரு நாட்டவரிடமும் ஆயுதங்களைக் கொள்முதல் செய்கின்றன. விளைவு? நிலை இன்று வெடிக்கவிருக்கும் எரிமலையாக உருவெடுத்திருக்கிறது.

மத்தியக் கிழக்கில் மட்டிலும்தான் அப்படி என்பதல்ல!

ஆப்கானிஸ்தானும், பாகிஸ்தானும் அண்டை நாடுகள்; இரண்டிற்குமிடையே சமீபகாலமாக மனத்தாங்கல்—கசப்பு—உறவு முறிவு—பரஸ்பரக் குற்றச்சாட்டு. இப்படி உள்ள இரு நாடுகளிடையேயும், மீண்டும் நல்லுறவும், நட்பும மலரச் செய்ய வேண்டுவதே, 'சமாதானத்திற்குப் பாடுபடுகிறோம்' என்று கூறுவோரது செயலாயிருக்க முடியும். ஆனால், நடப்பது, என்ன? பாகிஸ்தான் ஏற்கனவே அமெரிக்காவிடமிருந்து இராணுவ தளவாடங்களைக் கொள்முதல் செய்திருக்கிறது. அதுவுமன்றி, 'தென் கிழக்கு ஆசிய பாதுகாப்பு' என்ற அமெரிக்க இராணுவக் கூட்டிலும் சேர்ந்திருக்கிறது.

இந்தப் பலம் பெற்றுள்ள பாகிஸ்தான் தங்களை அச்சுறுத்துவதாகக் கூறி ஆப்கானிஸ்தான், ரஷ்யாவிடம் ஆயுதங்களைக் கொள்முதல் செய்கிறது.

வல்லரசுகளிடை உண்மையான சமாதான ஆர்வம்நிறைந்திருப்பதாக நம்புவதைக் கடினமாக்குவதற்கு இந்தச் சம்பவங்கள் போதுமானதல்லவா?

சிறு சிறு நாடுகளுக்கிடையே எழக்கூடிய தகராறுகளைத் தீர்த்துவைக்க முயற்சிப்பதுதான் சமாதான விரும்பிகளின் செயலாயிருக்க முடியுமே தவிர, எட்டிக்குப் போட்டியாக, பகைமை கொண்ட நாடுகளுக்கு ஆயுத உதவி அளிப்பது எந்த வகையில் சமாதானத்திற்கு உதவுவதாயிருக்க முடியும்?

இப்படி ஆதிக்கப் போட்டியில் வல்லரசுகள் ஈடுபட்டிருக்கும்வரை சமாதானம் நிலைத்து நீடிக்கும் என்பது சந்தேகமானதே—என்று, உலக மக்கள் அஞ்சுவதில் தவறென்ன?

எண்ணெய்க் கிணறு!

புதுடில்லிக் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளது

புதடில்லியில் நடைபெறும் இந்தியக் கைத் தொழில் காட்சியில், அசாம் எண்ணெய்க் கம்பெனி, பார்வை மேடையை அமைத்திருக்கிறது. பெட்ரோலியம் தொழில் சம்பந்தமான தகவல்களையும், இயந்திர சாதன அமைப்பு முறைகளையும் அங்கு தெரிந்துகொள்ள முடியும்.

பிரம்மபுத்திரா நதிப் பள்ளத்தாக்கில் நகோர்கதியா என்ற இடத்தில் எண்ணெய்க் கிணறு தோண்ட உபயோகிக்கப்படும் துளைக் கருவியின் மாதிரி அமைப்பு ஒன்றை காட்சி மேடையில் வைத்திருக்கிறார்கள். எண்ணெய் உற்பத்தி சம்பந்தமான மற்ற இயந்திரச் சாதனங்களையும் அங்கு பார்க்கலாம்.

சீனாவின் மகத்தான சாதனைகள்!

தூதுவர் தரும் நற்சான்று

"சீனாவின் சாதனைகளை விரல்விட்டு எண்ணிவிடலாம்; ஆனால், அந்தச் சாதனைகள் எந்த நாகரிக நாடும் பெருமைப் படக்கூடிய சாதனைகளாகும்; நாணயச் சீர்திருத்தம், இலஞ்ச ஒழிப்பு, நிலச் சீர்திருத்தம், பெண் உரிமை ஆகியவை அச்சாதனைகளில் முக்கியமானவையாகும். இலஞ்சத்தை ஒழிப்பதற்குக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது; இவற்றை 'கண்மூடித்தனமானவை' என்றுகூடச் சிலர் கூறலாம்; ஆனால், இவற்றினால் மக்களுக்கு நன்மை ஏற்பட்டது.

"சீனப் பெண்கள், இன்று எல்லாத் துறையிலும் ஆண்களுக்குச் சமமான நிலையில் உள்ளனர்; 'பெண்களிடம் பொறுப்பை ஒப்படைத்தால் திறமை குறைந்துவிடும்' என்ற வாதம் பொய்த்துப் போய்விட்டது,"

—என்று, சமீபகாலம் வரையில் செஞ்சீனாவில் இந்தியத் தூதவராகப் பணியாற்றியவரும், அர்ஜெண்டைனாவில் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளவருமான திரு. என். இராகவன், பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் கூட்டத்தில் சீனா பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டு மேலும் சொன்னார்:—

"இப்போதைய மக்கள் சீனா' எந்த நாட்டிற்கும் சார்புள்ள நாடாக இருக்கமுடியாது; வேறு எந்த நாடும் அதைக் கைப்பற்ற இயலாத அளவுக்கு அது மிகப் பெரிய நாடாகும்.

"மக்களிடையே, சமூக உணர்ச்சியை ஏற்படுத்துவதிலும், நாட்டின் நிர்மாணத் துறைக்கு உற்சாகத்தை ஏற்படுத்துவதிலும் மக்கள் சீனாவின் வழியை இந்தியா பின்பற்றலாம்.

"நாகரீகமடைந்த எந்த நாடும் பெருமைப்படக் கூடிய திட்டங்களைத்தான் சீனா சாதித்திருக்கிறது ஆனால், இதற்காக அங்கு கையாளப்படும் முறைகளை நாம் ஏற்றுக்கொள்ள இயலாது என்பதை வருத்தத்துடன் கூறுகிறேன்.

"நிலச் சீர்திருத்தம் பற்றி அங்கு முழு அளவில் பிரசாரம் செய்யப்படுகிறது. இது கைத்தொழில் பொருளாதாரத்தை ஏற்படுத்துவதற்குப் பூர்வாங்கம்என்று கூடக் கருதப்பட்டது.

"சீனாவில் எங்கும் நிர்ப்பந்தமாக வேலை வாங்கப்படுவதை நான் காணவில்லை; அதற்கு அவசியமும் இல்லை"

இந்தியைப் புகுத்துவதில் பேரரசின் தீவிரம்!

நடவடிக்கைகள் குறித்து சில விபரங்கள்

சென்னை, நவ. 1—

இந்தியப் பேரரசினர் இந்தி மொழியைப் புகுத்துவதில் எத்தனை தீவிரம் காட்டிவருகின்றனர் என்பது நாடறிந்தது.

'இந்தி மொழியைப் பரப்புகிறோம்' என்ற பெயரில் அவர்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றி அவ்வப்போது செய்திகள் வந்தவண்ணமுள்ளன; சில இப்போது கிடைத்திருக்கிறது.

கல்லூரிகளிலும், மத்திய இடைநிலைக் கல்விக் கூடங்களிலும் இந்தியைப் புகுத்துவதற்கும், இந்தி போதிக்கும் ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்குமான திட்டங்களுக்கு இந்தி வழங்காத பகுதிகளில்,இந்திய சர்க்கார் நிதி உதவி வழங்கும் என்று தெரியவருகிறது.

இதுவன்னியில் இந்தி புத்தகங்கள் கொண்ட தனி படிப்பகங்கள் திறப்பதற்கும், ஏற்கனவேயுள்ள படிப்பகங்களில் இந்திப் புத்தகங்கள் வழங்குவதற்கும் நிதி உதவுவதெனவும் இந்தியப் பேரரசு முடிவு செய்துள்ளதாம்.

மேலும், சினிமாக்கள் மூலமும், இதர வழிகளிலும் இந்தி மொழியை சுலபமாகக் கற்பிப்பதற்குத் திட்டங்கள் வகுக்கவும் சர்க்கார் உத்தேசித்திருக்கின்றனர்.

இப்படி இந்தி பரப்புவதற்கான வேறு வழிகள் இருந்தால், அவற்றைத் தொடர்புடைய மாநில சர்க்கார் மூலம் அறிவித்தால், அவை குறித்தும் சர்க்கார் கவனம் செலுத்துவராம்!

இந்தி மொழி வழங்காத பகுதிகளில் இந்தி பரப்பும் வேலை இதுவரை எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது என்பதையும் இனி தொடர்ந்து இந்தியை வேகமாகப் பரப்புவதற்கு வழிகள் என்ன என்பதையும் கண்டறிவதற்காக இந்தியப் பேரரசினர் நான்கு வட்டாரக் குழுக்களை அமைத்திருக்கின்றனர்.

தென் வட்டாரத்தில்-சென்னை, கேரளம், ஆந்திரம், மைசூர், ஐதராபாத்—ஆகிய மாநிலங்கள் அடங்கும்.

இந்தத் தென் வட்டாரத்திற்காக அமைக்கப்பட்டுள்ள குழுவிற்கு டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் தலைவராவார். உ. பி-யைச் சேர்ந்த பாலகிருஷ்ண சர்மா என்பவரும், பீகாரைச் சேர்ந்த தினகர் என்பவரும் உறுப்பினர்கள்.

நான்கு வட்டாரக் குழுக்களின் தலைவர்களும் டில்லியில் இருமுறை கூடி பூர்வாங்கப் பேச்சுக்கள் நடத்தியிருக்கின்றனர்; அவர்கள் மேற்கொள்ள வேண்டிய வேலைத் திட்டம் பற்றியும் விவாதித்திருக்கின்றனர்.

மாநில சர்க்கார்கள், இந்தியைப் பரப்புவதற்கு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன — இனி என்ன திட்டங்கள் வைத்திருக்கின்றன என்பதை எல்லாம் தெரிவிக்குமாறு, குழுவினர் சுற்றறிக்கை அனுப்பியுள்ளனர் என்றும், சீக்கிரமே குழுவினர் தங்கள் தங்கள் வட்டாரங்களில் சுற்றுப் பயணம் செய்துவிட்டு, இந்த ஆண்டு இறுதிக்குள் தங்களின் சிபாரிசுகளைத் தெரிவிப்பர் என்றும் தெரியவருகிறது.

மீண்டும் நம்பிக்

கோருகிறார்!

பாரிஸ், நவ

'வரும் டிசம்பர் திங்களி[ல்] [தேர்]தல் நடத்தவேண்டும்' என் [சர்க்]கார் கொண்டுவரும் மசோ[தாவை] ஒட்டி, தன்மீது நம்பிக்கை [தெரி]விக்குமாறு தேசிய சட்ட ச[பையில்] பிரதமர் எட்கார் பாரே தெ[ரிவித்]திருக்கிறார்.

சர்க்கார் உதவியுடன் [தொழி]லாளர்களுக்கு வீடு கட்டிக் [கொடுப்]பதற்கான திட்டத்தின்கீழ், [5,632] வீடுகளைக் கட்டுவதற்காக 1[955] ஆகஸ்ட், செப்டம்பர் மாத[ங்களில்] இந்திய சர்க்கார் மொத்தம் [ரூ.] 2,03,44 380 நிதி உத[வியாக] வழங்கியுள்ளனர்.

கிரேக்க நகரில் ஆர்ப்பாட்

'சைப்ரஸ் எங்களுடன் இணையவேண்டு

பத்ராஸ் (கிரேக்கம்), நவ. 1—

'சைப்ரஸ் கிரேக்கத்துடன் இணையவேண்டும்' என்று கோரி, மேற்கு கிரேக்க துறைமுக நகரில் பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டிருக்கிறது.

போலீசார், ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததின் விளைவாக 25 ஆர்ப்பாட்டக்காரர்களும், 20 போலீசாரும் காயம்பட்டதாகக் கூறப்படுகிறது.

இங்குள்ள பிரிட்டிஷ் துணைத் தூதுவர் அலுவலகத்தின் முன் ஆர்ப்பாட்டக்காரர்கள் பெரும் அளவில் கூடி கட்டிடத்தையே முற்றுகையிட்டுவிட்டனராம்.

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்த குழந்தைகள், கட்டிடத்தின் மீது கற்களை வீசி எறிந்து ... ஜன்னல்களை உடை[த்து] எறிந்ததாயும் கூறப்படுகிறது.

இதுபோல அமெரிக்க த... தரும் நிலையத்தின் முன்பும் ... பாட்டம் நடந்ததாம்.

பின்னர் பத்ராஸ் நகர ... லய மதகுரு அங்கு வந்து கூ... திரளைக் கலைந்து போகு[மாறு] கேட்டுக்கொண்டாராம்.

சைப்ரஸ் விடுதலை இயக்கத்... வரான மகாரியஸ் பாதிரி... கிரேக்கப் பிரதமரைச் சந்தி[த்து] உரையாடியிருக்கிறார்.

சைப்ரஸ் விடுதலை பற்றி ... வரும் ஒத்த கருத்துடையரா[யிருந்]தனர் என்று சந்திப்பிற்குப் ... தெரிவிக்கப்பட்டதாம்.

45-இலட்சம் பேருக்கு வேலை கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படுமாம்!

ரூ. 260 கோடி செலவில் கிராம, குடிசைத் தொழில் அபிவிருத்தியாம்

'இனிமேல் அரிசி ஆலைகள் ஏற்படுத்தக்கூடாது'— கார்வே குழுவின் சிபாரிசுகள்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், கிராமக் கைத்தொழில்களையும், சிறு கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்வதற்கென நியமிக்கப்பட்டிருந்த கார்வே குழு, ரூ. 2,59,61,00,000 செலவில் அபிவிருத்தித் திட்டங்களை சிபாரிசு செய்திருக்கிறது. இந்த வேலைத் திட்டங்களின் மூலம் சுமார் 45 இலட்சம் பேருக்கு வேலை கிடைக்கும் என்றும் மதிப்பிடுவதாக அக்குழு தெரிவித்திருக்கிறது.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், கிராமக் கைத்தொழில்கள், சிறு கைத்தொழில்கள் ஆகியவற்றின் மூலமாக உபயோகப் பொருள்கள் அதிக அளவில் கிடைக்கும்படி செய்வது அவசியமென வலியுறுத்தப்பட்டிருப்பதற்குக் காரணம், நாட்டில் வேலையின்மை, வேலைக் குறைவுப் பிரச்சினைகள் மேலும் மோசமாகிவிடாதபடி தடுக்கவேண்டும் என்ற விருப்பமேயாகும்," என்று அக்குழு கூறியிருக்கிறது.

சிறு கைத்தொழில்கள், கிராமக் கைத்தொழில்கள் ஆகியவை சம்பந்தமான விஷயங்களைக் கவனிக்கத் தனியாக ஒரு இலாகா ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும், அந்த இலாகாவிற்கு அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமென்றும், அபிவிருத்தி வேலைகளனைத்தும் நடைபெற அகில இந்தியக் கைத்தறி, காதி, கைநுட்பவேலைகள் சிறு கைத்தொழில்கள், தென்னை நார், பட்டு ஆகிய குழுக்களின் தலைவர்களை உறுப்பினராகக் கொண்டதும். இலாகாவின் அமைச்சரைத் தலைவராகக் கொண்டதுமான இணைப்புக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் அக்குழு ஆலோசனை கூறியிருக்கிறது.

தற்போதுள்ள தொழில்களில், வேலையின்மையோ, வேலைக் குறைவோ மேலும் தளர்ந்து விடாதபடி தடுப்பதற்கான வழி வகைகள் பற்றி யோசனை கூறுவது; சாத்தியமான அளவுக்கு வேலை வாய்ப்புகள் மேலும் அதிகமாக கிடைக்கும்படி செய்வதற்கான யோசனைகள் கூறுவது; வருங்காலத்தில் சமுதாயம் ஒரு சில இடங்களில் குவிந்து கிடக்காமல் பரவலாக அமைவதற்கானதொரு ஏற்பாட்டுக்கு அடிப்படையை அமைப்பதுடன் இதைச் செய்யும்போது, பொருளாதார அபிவிருத்தியையும் கூடியவரையில் வேகமாக நடைபெறுவதற்கு வகை செய்வது என்ற அம்சங்களையே குழு தனது வேலையின் முக்கிய அம்சங்களாகக் கொண்டிருக்கிறது.

'கார்வேக் குழு' என்று சொல்லப்படும் இந்த 'கிராம, சிறு தொழில்கள் (இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்) குழு' டி ஜி கார்வே என்பவரைத் தலைவராகக் கொண்டு திட்டக் குழுவினால் நியமிக்கப்பட்டது.

கைத்தறி-காதி; கைக்குத்தல் அரிசி; தாவர எண்ணெய்; செருப்பு, தோல் பதனிடுதல்; வெல்லம் கண்ட்சேரி சர்க்கரை; குடிசைத் தொழில் ரீதியான தீப்பெட்டி தயாரிப்பு; சிறு தொழில்கள்; பட்டுப் பூச்சி; கயிறு தயாரிப்பு ஆகிய தொழில்கள் குறித்துக் குழு விவரமாகப் பரிசீலனை நடத்தியிருக்கிறது.

நிதி ஆதாரங்கள்

கிராம—சிறு தொழில்களின் அபிவிருத்திக்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 259 61 கோடி செலவிடப்பட வேண்டுமென்று குழு யோசனை கூறியிருக்கிறது. அதில் ரூ. 25 25 கோடி மத்திய சர்க்காரிலும், ரூ. 234 36 கோடி மாநில சர்க்கார்களிலும் செலவிட ஒதுக்கி வைக்கப்பட வேண்டும் என்றும், இத்தொகைதான் இந்தத் துறைக்கான மொத்தச் செலவுத் தொகை என்றும் அக்குழு சிபாரிசு செய்துள்ளது.

மேலும், கைத்தறித் துணி நெசவுக்கு ரூ 80 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது; ரூ. 23 கோடி பரவலான தொழிலமைப்பு ரீதியில் நூல் நூற்பதற்கும், காதி தயாரிப்புக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது; பட்டு நெசவுக்கும், கம்பளி நெசவுக்குமாக ஒவ்வொன்றுக்கும் ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது; கிராமத் தொழில்களுக்கு ரூ. 47 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதில் ரூ. 8 26 கோடி கைக்குத்தல் அரிசி தயாரிப்புக்கும், ரூ 13 கோடி கிராம எண்ணெய் தயாரிப்புக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன; சிறு தொழில்களுக்கு ரூ. 65 கோடியும், கைவேலைப் பொருள்கள் தயாரிப்புக்கு ரூ 11 கோடியும், பட்டுப் பூச்சி வளர்ப்புக்கு ரூ 6 கோடியும், கயிறு தயாரிப்புக்கு ரூ. 2 கோடியும், நிர்வாகம், பயிற்சி, ஆராய்ச்சி முதலிய பொதுத் திட்டங்களுக்காக ரூ. 15 கோடியும் ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

காதி, கைவேலைப் பொருள்கள், குடிசைத் தொழில் ரீதியான தீக்குச்சி தயாரிப்பு ஆகியவை தவிர மற்றத் தொழில்களுக்கெல்லாம் மாநில வாரியாய் நிதி ஒதுக்க வேண்டும் என்றும் அக்குழு கூறியிருக்கிறது.

எத்தனை பேருக்கு வேலை வசதி?

இந்த அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் 30 இலட்சத்திற்கும் அதிகமான பேருக்கு இன்னும் அதிக அளவில் வேலை கிடைக்குமென்றும், பருவகால ரீதியில் 10 இலட்சம் பேருக்கு வேலை கிடைக்குமென்றும், மேலும் 5 இலட்சம் பேருக்கு முழுநேர வேலை கிடைக்குமென்றும் குழு மதிப்பிட்டிருக்கிறதாம். எனவே, சுமார் 15 இலட்சம் பேருக்கு 'ஏதோ ஒருவிதத்தில்' வேலை கிடைக்க வாய்ப்பு ஏற்படுகிறது என்றும் அக்குழு தெரிவித்திருக்கிறது.

கைக்குத்தல் அரிசி

கைக்குத்தல் அரிசியைப் பற்றிய பிரச்சினையில், புதிதாக இனிமேல் இயந்திர ஆலைகள் ஏற்பட அனுமதிக்கக்கூடாது என்றும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், கைக்குத்தல் அரிசிக்கு ஏற்பாடு செய்ய முடியாத நேரங்களில் தவிர மற்றப்படி இப்போதுள்ள ஆலைகளின் உற்பத்தி அளவு அதிகரிக்காதபடி தடுக்கவும் வேண்டும் என்றும் குழு கூறியிருக்கிறது. அப்படியே ஏதாவது விசேட சந்தர்ப்பங்களில் புதிய ஆலைகளை ஏற்படுத்த அனுமதித்தால்கூட, அது, சர்க்கார் ஏற்படுத்துகிற ஆலைகளாகவோ, அல்லது கூட்டுறவு நிறுவனங்கள் ஏற்படுத்துகிற ஆலைகளாகவோதான் இருக்கவேண்டும் என்றும் கருத்தறிவித்திருக்கிறது.

இனிமேல் அரிசி உற்பத்தியின் முழு அளவும், கைக்குத்தல் முறையிலேயே இருக்கவேண்டும் என்று அக்குழு சிபாரிசு செய்திருக்கிறது.

நெல் அரைக்கும் ஆலைகள் அனைத்தின் மீதும் மற்றும் சில தனி இயந்திரங்கள் மீதும் 'எக்சைஸ்' தீர்வை விதிக்க வேண்டும் என்றும், அந்தத் தீர்வைத் தொகை, கைக்குத்தல் சாதனங்களை அபிவிருத்தி செய்வதற்கும், கைக்குத்தல் தொழிலை நிறுவன ரீதியில் நன்றாக உருவாக்குவதற்கும் உபயோகப்படுத்தப்படவேண்டும் என்றும், கைக்குத்தல் அரிசி தயாரிப்புத் தொழிலுக்கு, ஆரம்பக் கட்டத்தில், தற்காலிகமாய் உற்பத்தி சகாயத் தொகையையும் அனுமதிக்கவேண்டுமென்றும் குழு சிபாரிசு செய்திருக்கிறது.

கிராம எண்ணெய்த் தொழில்

கிராம எண்ணெய்த் தொழிலைப் பொறுத்தவரையில் செக்குகளின் முழு சக்தியும் பயன்படுத்தப்படாமல் இருப்பதுதான் முக்கியப் பிரச்சினை என்றும், எண்ணெய் ஆலைகளில் பருத்தி விதையைப் பிழிந்து எண்ணெய் எடுப்பது எந்த அளவுக்குச் சாத்தியம் என்பதை சர்க்கார் பரிசீலிக்க வேண்டும் என்றும் குழு சிபாரிசு செய்திருக்கிறது.

தீக்குச்சித் தொழில்

தீக்குச்சி தயாரிப்பு விஷயத்தில், புதிதாக ஏற்படப்போகும் உற்பத்தி முழுவதும் 'பி' 'சி' 'டி' பிரிவுத் தொழில்களுக்கே ஒதுக்கப்படவேண்டும் என்பதைக் குழு ஆதரிக்கிறது—அதாவது, சிறு தொழில்களுக்கும், குடிசைத் தொழில்களுக்கும் ஒதுக்கப்படுவதைக் குழு ஆதரிக்கிறது.

சிறு தொழில்கள் அபிவிருத்திக்காக ஏற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்படும் தொழில் காலனிகளை பெரிய நகரங்களுக்கு அருகே மேலும் மக்கள் நெருக்கடி ஏற்படுவதற்கு இடமில்லாதபடி தொலைதூர இடங்களில் ஏற்படுத்தவேண்டும் என்பது குழுவின் கருத்து.

ஆசிரியருக்குக் கடிதம்

நகர சபை கவனிக்குமா?

ஐயா,

சென்னை நகரத்திலுள்ள ஹேர் கட்டிங் சலூன்'களுக்கு, சென்னை நகரசபை சில ஆண்டுகளாக மூன்று நாற்காலிகளுக்கு ரூ 5 ஆகவும், அதற்கு மேலுள்ள ஒவ்வொரு நாற்காலிக்கும் ரூ 2 ஆகவும் லைசென்சு கட்டணம் விதித்திருக்கிறது. மேற்கண்ட கட்டணம் அமுலாவதற்குமுன், மூன்று நாற்காலிகளுக்கு ரூ. 1 ஆகவும், அதற்கு மேலிருந்தால் நாற்காலி ஒன்றுக்கு ரூ. 1 வீதமும் லைசென்சு கட்டணம் இருந்து வந்தது. ஆரம்பத்தில், 'ஹேர் கட்டிங் சலூன்'களுக்கு, சென்னை நகரசபை இலவச லைசென்சு வழங்கிவந்துள்ளது.

தற்சமயம் சென்னை நகரிலுள்ள 'ஹேர் கட்டிங் சலூன்'கள் இலாபகரமாக நடைபெறவில்லை; வரவிற்குள் செலவைச் சரிக்கட்டவே முடியவில்லை

கோவை, மதுரை நகரசபைகள் அங்குள்ள 'ஹேர் கட்டிங் சலூன்'களுக்கு நியாயமான முறையில் லைசென்சுக் கட்டணங்களைக் குறைத்திருக்கின்றது.

எனவே, சென்னை நகரசபையும், சென்னை நகரிலுள்ள 'ஹேர் கட்டிங் சலூன்'களுக்கு விதித்திருக்கிற இந்த உயர்ந்த லைசென்சு கட்டணத்தை, முன்னர் இருந்த அளவிற்குக் குறைக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

டாக்டர் ந. சிவானந்தம்,
சென்னை.

கழகச் செய்திகள்

★

சென்னை—3-வது வட்ட தி. மு. கழகம்

28—10—55 மாலை $7\frac{1}{2}$ மணிக்கு நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கிளைக் கழக வரவு-செலவுகளும், ஆண்டு விழாப் பொதுக் கூட்ட வரவு-செலவுகளும் சரி பார்க்கப்பட்ட பின், மாவட்டப் பிரதிநிதி தோழர் குப்புராஜ் விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தோழர்கள் இரா. சு. மூர்த்தி, ம. செ. முனுசாமி, ச. பாண்டியராசன் ஆகியோரைப் புதிதாகச் செயற்குழுவில் சேர்த்துக் கொண்டும், தோழர்கள் வீ கே. பி. சாமி, பாண்டியராசன், மாரியப்பன், ஞானதேசிகன், சுடலைமுத்து ஆகியோரைக்கொண்டதாக பிரச்சாரக் குழு திருத்தியும் அமைக்கப்பட்டது.

மேலூர்-மதுரைமாவட்டம் தி. மு. க. பொதுக்கூட்டம்

30—10—55 மாலை 6 மணிக்கு, முனியாண்டி கோவில் திடலில், தோழர் முத்துராமன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் கண்ணதாசன், எஸ் எஸ் தென்னரசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்

தோழர் கண்ணதாசன் பஸ் ஸ்டாண்டு அருகில் தி. மு. கழகக் கொடியை ஏற்றினார். கொடியின் தத்துவத்தை விளக்கிச் சிறிது நேரம் பேசினார்.

தென்னாட்டில் ஒரு அச்சகம் நிறுவ மத்திய சர்க்கார் திட்டம்?

நாசிக் நகரில், சுமார் ரூ. 2 கோடி செலவில் இந்தியப் பேரரசு அச்சுக்கூடம் ஒன்றை நிறுவியிருக்கிறது.

1923-ல் புதுடில்லி அச்சகம் திறந்தபின், இப்போது இங்கு திறக்கப்பட்டதுதான் சர்க்கார் நிறுவும் முதல் அச்சுக்கூடமாம்.

இந்த அச்சுக்கூடத்தைத் திறந்து வைத்துப் பேசிய மத்திய மந்திரி சர்தார் சுவரண் சிங், தென்னாட்டில் ஒரு அச்சுக் கூடம் அமைக்க சர்க்கார் உத்தேசித்திருப்பதாயும், சென்னையில் அச்சுக்கூடப் பயிற்சிசாலை ஒன்று நிறுவவும் எண்ணியிருப்பதாயும் தெரிவித்திருக்கிறார்.

இந்தப் பள்ளியைப் போல மேலும் மூன்று பள்ளிகள், பம்பாய், கல்கத்தா, அலகாபாத் ஆகிய நகரங்களிலும் திறக்கப்படும் என்றும், மேலும் ஒரு அச்சகம் பஞ்சாபில் உள்ள பரீதாபாத் எனும் இடத்திலும் அமையும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

செய்திச் சுருள்

★

கொச்சி — சித்தூரில் பொதுக் கூட்டம்

29—10—55 மாலை 6 மணியளவில் சித்தூர் அறிவு வளர்ச்சி சங்கத்தில் தோழர் சி. ஏ. முத்துச்சாமி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், சித்தூர் (திரு-கொச்சி) பகுதியை தமிழகத்துடன் இணைக்கவேண்டுமென்று கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அறிவு வளர்ச்சி மன்றம்

30—10—55 காலை 10 மணியளவில் சென்னை—புரசைவாக்கத்திலுள்ள மேற்படி மன்ற 4வது ஆண்டு விழாவும், இலவச வாசகசாலை, இரவுப்பள்ளி திறப்பு விழாவும் தோழர் க. அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. தோழர் சிவசங்கரன் கல்வியின் அவசியம் குறித்துச் சொற்பொழிவாற்றினார். பின்னர், தோழர் என். கமலக்கண்ணன் தலைமையில் நடைபெற்ற மன்ற நிர்வாகிகள் தேர்வில் பொன். நடராசன், சி என். கண்ணன், அ. பச்சையப்பன் ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தெ.ஆ. இன ஒதுக்கல்

ஐ. நா.-வில் பல நாடுகள் கண்டனம்

நியூயார்க், நவ. 1—

"இன ஒதுக்கல் என்பது, ஒரு நாட்டின் உள்விவகாரமல்ல; ஏனெனில், அதனை ஒட்டி எழும் சிக்கல்கள் இதர நாடுகளையும் பாதிக்கக் கூடியவையாயிருக்கின்றன.

"தென்னாப்பிரிக்கப் பிரதிநிதி, சென்ற ஆண்டு ஐ. நா. சபையின் இந்தக் குழுவினர் இன ஒதுக்கல் பற்றி விவாதிக்கும் போது இங்கிருந்தார்; ஆனால் இந்த ஆண்டு வெளியேறி விட்டிருக்கிறார். கடந்த கால விவாதத்தில் கலந்து கொண்டது சரியானால், இப்போது கலந்து கொள்வது மட்டும் எப்படித் தவறுடையதாகும்? இது முரண்படும் போக்கல்லவா?

"இன ஒதுக்கலினால் ஏற்படக் கூடிய விளைவுகளைக் குறித்து ஐ. நா. குழுவினர் சில எச்சரிக்கையும் தந்திருக்கின்றனர். இதனை தென்னாப்பிரிக்க சர்க்கார் கவனித்தாக வேண்டும்.

"ஒருவர் சபையினின்றும் வெளியேறி விடுவதினாலேயே இந்தச் சபை அது குறித்து விவாதிக்காமலிருந்ததில்லை; தொடர்ந்து விவாதத்தை மேற்கொண்டு வந்திருக்கிறது என்பதால், வெளியேறுவது பலன் எதும் தராது என்பதையும் தெ. ஆ பிரதிநிதிகள் உணரவேண்டும்."

இவ்வாறெல்லாம், நடந்த வியாழன்று நிறுத்தப்பட்டிருந்த ஐ. நா. பொதுச் சபையின் தனி அரசியல் குழுக் கூட்டம் இன்று நடைபெற்றபோது, தென்னாப்பிரிக்க இன ஒதுக்கலை ஒட்டி நடைபெற்ற விவாதத்தில் பல நாடுகள் கலந்து கொண்டு கருத்தறிவித்திருக்கின்றன.

எகிப்து, ஈராக், கோஸ்டாரிகா ஆகிய நாடுகள் விவாதத்தில் பங்கேற்றன.

உங்களுக்குத் தெரியுமா?

★

டேராடூனில் உள்ள இந்திய வனத் துறை ஆராய்ச்சிக் கழகம், வெட்டு மர உபயோகத்தில் புதியதொரு தொழில் நுட்ப முறை பற்றி ஆராய்ச்சி நடத்துவதற்காக, வெட்டு மர எஞ்சினியரிங் பிரிவொன்றை ஏற்படுத்தியிருக்கிறது.

மெட்ரிக் நிறுவை-அளவை முறைபற்றிப் பொதுமக்களுக்குப் பழக்கம் ஏற்படுத்துவதற்காக, இப்பொழுது உபயோகத்தில் இருந்து வரும்தராசுகளையும்,இதர அளவை-நிறுவை சாதனங்களையும், முக்கியமாக இரயில்வேக்களிலும், தபால்-தந்தி இலாகாவிலும் உபயோகத்தில் இருந்து வருபவற்றை 'மீட்டர்' கணக்கில் குறிப்பிட வேண்டுமென்று, நித்தியானந்த கனுங்கோவைத் தலைவராகக் கொண்ட 'மெட்ரிக் - நிறுவை அளவை'நிர்ணயக்குழு முடிவு செய்திருக்கிறது.

சாலைகளில் இருக்கும் மைல் கல்கள், பர்லாங் கல்கள் முதலியவற்றைக் கூடிய சீக்கிரத்தில் 'மீட்டர்' அளவுப்படி மாற்றியமைக்க வேண்டுமென்றும், இடைக்கால ஏற்பாடாக ஒரு பர்லாங்கை இரண்டு 'ஹெக்டாமீட்டர்'கள் என்று குறிப்பிடலாம் என்றும்,ஐந்தாவது கல் ஒவ்வொன்றையும் 'கிலோமீட்டர்'எனக்குறிப்பிடலாமென்றும், இவ்வாறு குறிப்பிடுவதால், சரியான அளவில் ஏற்படக்கூடிய வித்தியாசத்தை ஒரு இடத்தில் சரிக்கட்டி அமைத்துவிடலாம் என்றும், 'மெட்ரிக் அளவை முறை நிர்ணயக் குழு' முடிவு செய்திருக்கிறது.

1958 ஏப்ரல் 1-ம் தேதிக்குள் நாடு முழுவதும் மதுவிலக்கைப் பூரணமாக அமுலுக்குக் கொண்டுவந்துவிட வேண்டுமென்று மதுவிலக்கு விசாரணைக் குழு சிபாரிசு செய்திருக்கிறது.

'வேலையின்மையைப் போக்க முதல் 5-ஆண்டு திட்டம் பயன்படவில்லை'

நிதி மந்திரி தேஷ்முக் ஒப்பம்

புதுடில்லி, நவ. 2—

"முதல் ஐந்தாண்டுத் திட்டத் துவக்கக் காலத்தில் இருந்ததைக் காட்டிலும் இன்று இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் அளவு பரவி நிலைமை மோசமாயிருக்கிறது

"செலவு செய்யப்பட்ட தொகையின் அடிப்படையிலிருந்து கணக்கிட்டால், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் விளைவாக 50 இலட்சம் வேலைகள் உருவாக்கப்பட்டன. என்றாலும், ஆண்டுக்கு ஆண்டு வேலை கோருவோர் தொகை அதிகரித்து வருவதால், 'எல்லோருக்கும் வேலை' என்ற நிலை உருவாக, அந்தத் திட்டம் பயன்பட முடியாது போய்விட்டது,"

என்று, இந்திய நிதி மந்திரி சிந்தாமண் தேஷ்முக் தெரிவித்திருக்கிறார்.

"வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு முதல் திட்டம் எத்தனை தூரம் பயன்பட்டது?"

என்று, கேட்கப்பட்டபோது, அவர் கூறினார்:—

"இது குறித்து திட்டமான புள்ளி விவரமில்லை. அகில இந்திய அடிப்படையில் இப்போதுதான் விசாரணை நடக்கிறது. இன்னும் ஒரு திங்களுக்குள் விபரம் கிடைக்கலாம். ஆனால், ஒருவருக்கு வேலை கிடைக்க ரூ. 5,000 முதல் ரூ. 6,000 வரை மூலதனமிட வேண்டியிருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில், முதல் திட்டத்திற்குச் செலவிடப்பட்ட தொகையைக் கணக்கிட்டால், சுமார் 50 இலட்சம் பேருக்கு வேலை கிடைத்திருக்க வேண்டும்.

"இந்தியாவின் மக்கள் தொகை ஆண்டொன்றுக்கு 1.25 சத விகிதம்—அதாவது, 45 இலட்சம் அதிகரித்து வருகிறது; இவர்களில் 40 சத விகிதத்தினர், வேலை தேடுபவர்கள்; இவர்களுக்காக மட்டும் 90 இலட்சம் வேலைகள் உண்டாக்கவேண்டியிருந்தது.

"ஆனால் முதல் திட்டமோ, 50 இலட்சம் பேருக்கு மட்டுமே வேலை தேடித் தந்திருக்க முடியும்; எனவே, முதல் திட்டத் துவக்கக் காலத்தில் இருந்ததைவிட இப்போது வேலையில்லாத் திண்டாட்ட நிலை மோசமாகியிருக்கிறது."

தோழர் கண்ணதாசன் இலங்கைப் பயணம்

7-11-55 காலை 10 மணிக்கு, 'தென்றல்' ஆசிரியர் தோழர் கண்ணதாசன் அவர்கள், விமானம் மூலம் இலங்கைக்குப் பறப்படுவார். சுமார் இருபது நாட்கள் அங்கு தங்கி விழாக்களில் கலந்துகொண்டு தாயகம் திரும்புவார். (ந. நி.)

பேச்சுவார்த்தை முறிந்தால்......!

விஜயவாடா, நவ. 2—

"சென்னை — ஆந்திரா எல்லைத் தகராறுகளைப் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்ப்பதற்காக மேற்கொண்டுள்ள முயற்சிகள் தோல்வியுறுமானால், அப்பிரச்சினையில் மத்தியஸ்தம் செய்து வைக்கும்படி மத்திய ஆட்சியினரை ஆந்திர சர்க்கார் கேட்கும்"

என்று, அமைச்சர் கானா வெங்கட்ட ராவ் தெரிவித்துள்ளாராம்

நிகோசியா, நவ 2—

"சைப்ரஸ் தீவிற்கு 'டொமினியன் அந்தஸ்து' வழங்குவதினால் சிக்கல் தீர்க்கப்படலாம்,"

என்று, கவர்னரான ஹார்டிங் யோசனை தெரிவித்திருப்பதாக சைப்ரஸ் 'டைம்ஸ்' இதழ் அறிவித்திருக்கிறது.

"குறிப்பிட்ட காலத்திற்கு 'டொமினியன்' நிலையில் இருந்துவிட்டு, பின்னர், காமன்வெல்த்தில் இருப்பதா வேண்டாமா—என்பதை சைப்ரஸ் முடிவு செய்து கொள்ளலாம்" என்று பிரிட்டானியர் இப்போது சற்று தாழ்ந்த குரலில் பேசுகின்றனராம்.

கடன் வாங்குவதும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பணம் தேவைப்படும் நிலையிலிருக்கும் இந்தியா, பர்மாவிற்கு ரூ 20 கோடி கடன் தருவது, அதிசயமில்லையா?" என்று நிருபர் ஒருவர் கேட்டபோது, நிதி மந்திரி தேஷ்முக், 'பிறரிடமிருந்து வாங்குவதும், பிறருக்கு உதவி புரிவதுமான நாடுகளில் இந்தியாவும் ஒன்று,' என்று கூறிவிட்டு மேலும் தெரிவித்ததாவது:—

"நாம் கடன் வாங்குவது என்பது வேறு—கடன் தருவது என்பது வேறு; அவை எல்லாம் அகில உலக உறவின் ஒரு பகுதியாகும். 'இந்தியா பிறரிடமிருந்து வாங்குகிற நாடு மட்டும்தான்' என்ற, பொருளாதார முக்கியத்துவம் நீங்கிய இன்றைய சூழ்நிலையில் கருதுவது சரி என்று நான் நினைக்கவில்லை."

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம்

சென்னை சர்க்காரும் மூலதனப் பங்கு பெறும்

அகில இந்தியக் கைத்தறி 'போர்டு' முடிவை ஒட்டி, சென்னை மாநில கைத்தறியாளர் கூட்டுறவு சங்கத்தில் சென்னை சர்க்கார் பங்குகள் வாங்கவும், நிர்வாகத்தில் பங்கு பெறவும் முடியும் என்று தெரியவருகிறது.

சர்க்கார் கூட்டுறவு கொள்வது, சங்கத்தில் மூலதனப் பங்கினை உறுதிப்படுத்துவதுடன்கடன்வாங்கும் சக்தியை அதிகரித்துக்கொள்ளவும் உதவும் என்று கூறப்படுகிறது.

அரிசி ஏற்றுமதி

இந்த ஆண்டு இறுதிக்குள் அதிகபட்சமாக சுமார் 2 இலட்சம் டன் அரிசி ஏற்றுமதி செய்ய அனுமதிக்க இந்திய சர்க்கார் உத்தேசித்திருப்பதாகத் தெரிய வருகின்றது

இவ்வாண்டில், இதுவரையில் 65,000 டன் அரிசியை பிரிட்டன் இலங்கை, ஏடன், பாஹ்ரீன் தீவுகள், மோரீஸ் ஆகிய நாடுகளுக்கு இந்தியா ஏற்றுமதி செய்திருக்கிறது

சோவியத் பிரதமருக்கு எருமைகள் அன்பளிப்பு!

பாடியாலா, நவ. 2—

சோவியத் பிரதமர் மார்ஷல் புல்கானின், இந்தியாவில் பக்ராநங்கல் அணையைப் பார்க்க வரும்போது, இரண்டு எருமை மாடுகளை அவருக்கு அன்பளிப்பாகத் தருவதற்கு பெப்சு சர்க்கார் திட்டமிட்டிருக்கின்றனராம்.

'ரஷ்யாவில் மிக அரிது' என்று கருதப்படும் இந்த எருமைகள், ரூ. 1,000 மதிப்புடையனவாகும் என்றும் கூறப்படுகிறது.

கழகக் கூட்டம்

திருவொற்றியூர் (சென்னை) சன்னதி தெருவில்

5—11—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: ஏ. வி. ஆறுமுகம்

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை

டி. சண்முகம் எம்.எல்.ஏ.,

மாசிலாமணி

கூட்டத்தில், திருவொற்றியூர் தி. மு. கழகச் சார்பிலும், தொழிலாளர் சார்பிலும், அண்ணா அவர்களிடம் மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும்.

தி. மு. க. பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் நாச்சியார்கோவில் வருகை

8—11—55-ல், நாச்சியார் கோவில் கீழ வீதி தேரடியில், தோழர் கு. நாராயணசாமி தலைமையில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

மதுராந்தகம் தி. மு. க. கட்டிட நிதிக்காக

5—11—1955 சனி அன்று

தி. மு. கழகப் பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

தலைமையில்

எம். ஜி. இராமச்சந்திரன்

குழுவினர் நடிக்கும்

'இன்பக் கனவு'

நாடகம் நடைபெறும்

குறிப்பு: மாநில மாநாட்டு நிதி அளிக்கப்படும்.

பொதுக்கூட்டம்

5-11-55 மாலை 5-30 மணிக்கு, கொண்டயம்பட்டி இளைஞர் திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில், பெருமான் திடலில், தோழர் சோ ஆறுமுகம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் டி. கே. சீனிவாசன், எஸ் முத்து எம்.சி. கே. எஸ் சந்தானம் ஆகியோர் பேசுவர்.

திருமணம்

5-11-55 காலை 8-30 மணிக்கு, சென்னை-திருவொற்றியூர்: வடக்கு மாட வீதியில், தோழர் டி. கே பழனிச்சாமி-தோழியர் புஷ்பவதி திருமணம், தோழர் ஆர். நமச்சிவாயம் தலைமையில் நடைபெறும் தோழர்கள் சி. என். அண்ணாதுரை, டி. சண்முகம் எம்.எல்.ஏ., எம். கணபதி ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

சொற் பயிற்சிக் கூட்டங்கள்

4—11—55 மாலை 6 மணிக்கு, சென்னை-முத்தியாலுப்பேட்டை, எண் 17, சாலைவிநாயகர் கோவில் தெரு, முத்தமிழ் மன்ற பணிமனையில் நடைபெறும் 'அன்பு' எனும் பொருள் குறித்து மன்றத் தோழர்கள் பலர் பேசுவர்.

ஃ ஃ ஃ

5—11—55 மாலை 6 மணிக்கு, சென்னை-இராயபுரத்திலுள்ள வடசென்னை தானமுத்து நடராசன் முன்னேற்ற மன்ற பணிமனையில், தோழர் இரா புலியரசு தலைமையில் நடைபெறும். தோழர்கள் மா. கனிச்சொல்லன், எ. அனந்தவான், ஏ. ஜே இராபர்ட், ச. பாலன் ஆகியோர் பல பொருட்கள் குறித்துப் பேசுவர்.

ஃ ஃ ஃ

5—11—55 மாலை 6 மணிக்கு, சென்னை-வரதராசபுரம், மூர்த்தி வீதியில், வரதராசபுரம் நண்பர்கள் கழகச் சார்பில், தோழர் மு. ராமதுரை தலைமையில் நடைபெறும். 'நாமும்-ஆண்டவனும்' எனும் பொருள் குறித்து, தோழர்கள் எம். ஜி. முத்து, எம். சாந்தமதி, த. ம. தமிழ்மணி, மற்றும் பலர் பேசுவர்.

பிளவுபட்டுள்ள ஜெர்மனி ஒன்றுபடத் திட்டம்

ரஷ்யாவின் யோசனை நிராகரிக்கப்படும்?

நான்கு வல்லரசுகள் மாநாட்டில் குழப்ப நிலைமை?

ஜினீவா, நவ. 2—

இங்கு நடைபெறும் நான்கு வல்லரசுகள் மாநாட்டில், ஜெர்மன் ஐக்கியத்துக்கு வழிகோலும் 'அகில-ஜெர்மன் கவுன்சில்' அமைக்க வேண்டுமென்று, ரஷ்ய வெளிநாட்டு அமைச்சர் மாலடோவ், பிரரேபணை ஒன்று சமர்ப்பித்தார்.

'கிழக்கு, மேற்கு பார்லிமெண்டு பிரதிநிதிகள் இக்கவுன்சிலில் இருப்பார்கள்; இரு ஜெர்மனியினுடைய தற்காப்பு பற்றிய பிரச்சினைகளில் ஒற்றுமை காண்பதற்கு அப்பிரதிநிதிகள் முயற்சிப்பார்கள் என்று, அப்பிரரேபணை குறிப்பிடுகிறது

ரஷ்யத் திட்டம் நிராகரிப்பு?

பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கப் பிரதிநிதிகள், மாலடோவைச் சந்தித்து, ஜெர்மனியை ஒன்றுபடுத்துவதற்கான திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்கு மீண்டும் வற்புறுத்தினர். இந்த முக்கியமான பிரச்சினை தீராவிடில், உண்மையான ஐரோப்பியப் பாதுகாப்புக்குச் சாத்தியமில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.

ரஷ்யாவின் புதிய பிரரேபணையை அவர்கள் மறுத்துவிடக்கூடும்; ஏனெனில், அப்பிரரேபணை, ஜெர்மனி இரு கூறுகளாக இருப்பதை நீடிக்கிறதாம் அன்றியும், மேற்கு ஐரோப்பிய பாதுகாப்புக்கு முக்கிய ஆதாரமான அட்லாண்டிக் ஒப்பந்தத்தை ரத்து செய்யக் கோருகிறதாம்.

கிழக்கு ஜெர்மன் திட்டம்

பிளவுபடுத்தப்பட்டுள்ள ஜெர்மனியை படிப்படியாக ஒன்றுபடுத்தும் யோசனைகளைக் கூறும் ஒரு திட்டத்தைத் தயாரித்து, நான்கு வல்லரசு மாநாட்டிற்கு கிழக்கு ஜெர்மனி அனுப்பியுள்ளது.

கிழக்கு ஜெர்மனியில் 1,70,00,000 பேரும், மேற்கு ஜெர்மனியில் 5,00,00,000 பேரும் உள்ளனர்.

இராணுவத் துறையில் ஜெர்மனி ஒரு நடுநிலைமை நாடாக இருக்கும்—அங்கிருந்து எல்லா அன்னியத் துருப்புகளும் வெளியேற வேண்டும்—அது, தன்னுடைய சொந்தத் தேசிய இராணுவத்தை வைத்துக் கொள்ளும்—என்பது, திட்டத்தின் அம்சங்களாகும். முன்னமே, இதுபோன்ற திட்டமொன்றை மேற்கு நாடுகள் நிராகரித்துள்ளன.

காஷ்மீர் பிரச்சினையில் ஒரு 'திருப்பம்?'

காஷ்மீர் பிரச்சினை பற்றி பிரிட்டிஷ் 'காமன்வெல்த்' அமைச்சர் ஹோம் பிரபு, பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்திவருவதாக செய்தி ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

காஷ்மீர் தகராறு இந்தியா—பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளையும் பொறுத்த பிரச்சினை என்றும், தகராறுகள் குறித்த திட்டமான கொள்கைகளுடன் இரு நாடுகளும் அணுகினாலன்றி, இடையில் தலையிட்டு பிரிட்டன் எதுவும் செய்ய இயலாது என்று அவ்வமைச்சர் கூறியதாகவும் அச்செய்தி குறிப்பிடுகிறது.

ஜனவரியில் நடைபெறவிருக்கும் 'காமன்வெல்த்' பிரதமர்கள் மாநாட்டில், காஷ்மீர் பிரச்சினை விவாதிக்கப்படுமா என்பதைச் சொல்வதற்கு இயலாதென்றும் அவர் கூறினாராம்.

இந்தியரை ஏமாற்ற வெள்ளையர் சூழ்ச்சி

தென்னாப்பிரிக்காவின் இன ஒதுக்கல் சட்டத்தின்கீழ் டிரான்ஸ்வால் பகுதியிலுள்ள எர்மிலோ நகரில், கடைகள் வைத்துத் தொழில் நடத்தும் 24 இந்திய வியாபாரிகளை வெளியேற்றுவதற்கு முயற்சிக்கப்படுகிறதாம்!

அங்குள்ள வெள்ளையர்களுக்கு, இந்தவியாபாரிகள், 1,17 000 பவுன்கள் வரை கடன் தந்துள்ளனராம்; 40,000 பவுன்களுக்குமேல், 'வெள்ளையரிடமிருந்து வராத கடனாக'த் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாம்!

கள்ள நோட்டு தயாரித்த கோஷ்டி கைது

ரூ. 21 கோடி பெறுமானமுள்ள நோட்டுகள் உலவுகின்றன!

பாட்னா, நவ. 2—

கள்ள நோட்டுத் தயாரிக்கும் கோஷ்டி ஒன்றை இன்று நகர போலீசார், பல பகுதிகளிலும் தீவிர சோதனை நடத்தியிருக்கின்றனர்.

அந்தக்கோஷ்டியின் தலைவரைப் பிடிப்பதற்காக, பெரும் முயற்சி செய்திருக்கின்றனர்—தந்திரங்களைக் கையாண்டிருக்கின்றனர் போலீசார்.

ஒருவரை பணியாவாக நடிக்கச் செய்து அந்தக் கோஷ்டித் தலைவனிடம் பேரம் பேசச் செய்திருக்கின்றனர்.

ரூ. 10,000 பெறுமானமுள்ள கள்ள நோட்டுகளுக்கு ரூ. 50,000 தருவதாக அந்த போலிப் பணியா சம்மதம் தெரிவித்தாராம்.

கள்ள நோட்டுக் குழுத் தலைவனும் சம்மதித்து, குறிப்பிட்ட நாளில், பாணியா(வியாபாரி)வைச் சந்திக்க வந்தானாம்; ஆனால், கடைசி நேரத்தில், சந்தேகப்பட்டு ஓட முற்பட்டிருக்கிறான். சாதாரண உடையிலிருந்த போலீசார் அவனைப் பின் தொடர்ந்து நகரின் நடுவே ஒரு இடத்தில் பிடித்துக் கொண்டனர். அங்கு அவனிடமிருந்து, கள்ளநோட்டுத் தயாரிக்கும் சில சாமான்களடங்கிய பை ஒன்றும் கைப்பற்றப்பட்டிருக்கிறது.

இதனை ஒட்டி நகரின் பல பகுதிகளிலும் சோதனையிட்டு, மேலும் நால்வர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இந்த கோஷ்டியினர் பல மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்களது தலைமைப் பீடம் பம்பாய் நகர் என்றும் கூறப்படுகிறது.

ஏற்கனவே இந்த கோஷ்டியினர் சுமார் 21 கோடி ரூபாய் பெறுமான அளவுக்குப் பல பிரிவு கள்ள நோட்டுக்களை நாட்டில் உலவவிட்டு கொள்ளையடித்துவிட்டனர் என்றும் கூறப்படுகிறது.

இவர்களிடமிருந்து கள்ள நோட்டு அச்சடிக்கும் காகிதம், இயந்திரங்கள், அச்சுப் பொறிகள் எல்லாம் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும், இன்னும் போலீசார் தீவிரமாகத் தேடிவருகின்றனர் என்றும் தெரியவருகிறது.

சோவியத் பிரதமர் பர்மா செல்வார்

சோவியத் பிரதமர் மார்ஷல் புல்கானின் மற்றும் குருஷ்சேவ் இருவரும் பர்மிய நாட்டிற்கு இந்த ஆண்டு இறுதியில் செல்வார்கள் என்று மாஸ்கோ செய்தி ஒன்று கூறுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.